தினமணி

# காவிரி டெல்டா விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்கும் பணி தீவிரப்படுத்தப்படுமா?

எம். சங்கர்

First Published : 04 Oct 2010 01:20:10 PM IST

நாகப்பட்டினம், அக். 3: வடகிழக்குப் பருவமழை காரணமாக காவிரி டெல்டா மாவட்டங்களின் சம்பா நெல் சாகுபடிப் பணிகள் விறுவிறுப்படையத் தொடங்கியுள்ளன. இருப்பினும், கூட்டுறவு பயிர்க் கடன் வழங்கும் பணிகள் தீவிரப்படுத்தப்படாததால், சாகுபடி பணிகளில் பின்னடைவு ஏற்படும் வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகிறது.

நாகை மாவட்டத்தின் இயல்பான சம்பா நெல் சாகுபடி பரப்பு 1.02 லட்சம் ஹெக்டேர். திருவாரூர் மாவட்டத்தின் இயல்பான பரப்பு 1.08 லட்சம் ஹெக்டேர். தஞ்சாவூர் மாவட்டத்தில் 1.05 லட்சம் ஹெக்டேர்.

டெல்டா மாவட்டங்களின் பெரும் பகுதிகளில் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ளப்படாததால், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் நிகழாண்டில் சுமார் 3.85 லட்சம் ஹெக்டேரில் சம்பா நெல் சாகுபடி மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறுவைக்கு ஆற்றுப் பாசனம் கிடைக்காத நிலையில், சம்பா நெல் சாகுபடிக்காவது ஆற்றுப் பாசனம் கிடைக்கும் என எதிர்பார்த்த கடைமடை விவசாயிகளுக்கு ஏமாற்றமே நீடிக்கிறது. காரணம், ஜூலை 28-ம் தேதி திறக்கப்பட்ட மேட்டூர் தண்ணீர் இன்றளவும் காவிரியின் கடைமடைப் பகுதி விவசாயப் பணிகளின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் சென்றடையவில்லை.

இதனால், நிகழாண்டில் சம்பா நெல் சாகுபடியிலும் பெரும் பின்னடைவு ஏற்படும் என அஞ்சப்பட்டது. ஆனால், வடகிழக்குப் பருவ மழையின் காரணமாக தற்போது சம்பா நெல் சாகுபடி பணிகள் விறுவிறுப்படையத் தொடங்கியுள்ளன.

காவிரியின் கடைமடை மாவட்டமான நாகை மாவட்டத்தில் அக். 1-ம் தேதி வரை 32,517 ஹெக்டேரில் சம்பா, தாளடி நடவு மற்றும் நேரடி விதைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன என மாவட்ட வேளாண் துறை கணக்கெடுப்பில் கூறப்படுகிறது.

கடந்த ஆண்டைவிட, நிகழாண்டில் பரவலாக பெய்த மழையின் அளவு அதிகம் என்பதே சம்பா நெல் சாகுபடி விறுவிறுப்படைய காரணமாக உள்ளது. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 36.9 மி.மீ. மழை பெய்தது. நிகழாண்டில் 119.73 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

நாகை மாவட்டத்தில் இதுவரை நடவு முறையில் 16,872 ஹெக்டேரிலும், நேரடி விதைப்பு முறையில் 9,515 ஹெக்டேரிலும், ராஜராஜன்-1000 முறையில் 6,130 ஹெக்டேரிலும் சம்பா, தாளடி நெல் நடவுப் பணிகள் நடைபெற்றுள்ளன.

நாகை மாவட்டத்தில் நிகழாண்டில் சம்பா, தாளடி நெல் சாகுபடி சுமார் 1.39 லட்சம் ஹெக்டேரில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. அக்டோபர் மாத இறுதிக்குள் சுமார் 90 சதவீத நடவுப் பணிகள் நிறைவடையும் என்றார் நாகை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் உ. ராஜேந்திரன்.

தற்போதைய நிலையில், விவசாயப் பணிகளுக்குப் பின்னடைவு அளிக்கக் கூடிய முக்கிய பிரச்னையாகக் கருதப்படுவது பயிர்க் கடன்.

பயிர்க் கடன் வழங்குவதற்கான அடிப்படை நடவடிக்கைகளைக்கூட பல கூட்டுறவு வங்கிகள் இதுவரை மேற்கொள்ளவில்லை. இந்த நிலை மேலும் தொடர்ந்தால், சம்பா சாகுபடி பணிகளின் நிலை கேள்விக்குறியாகிவிடும் என்றார் காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கப் பொதுச் செயலாளர் வி. தனபாலன்.

புதிய உறுப்பினர்களுக்கு கடன் கிடையாது, ஏற்கெனவே கடன் தள்ளுபடி பெற்ற விவசாயிகளுக்கு கடன் கிடையாது என எதேச்சதிகாரப் போக்கில் கூட்டுறவு வங்கிகள் செயல்படுவதாக மாவட்ட நிர்வாகத்திடம் (செப்டம்பர் மாத விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில்) தெரிவித்தனர் விவசாயிகள். தற்போதும், கூட்டுறவு வங்கிகளின் செயல்பாட்டில் மாற்றம் இல்லை எனக் கூறப்படுகிறது.

பயிர்க் கடன் வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகள் உருவாகும் போதெல்லாம் பல கோடி ரூபாய் பயிர்க் கடன் கொடுத்ததாக கூட்டுறவு வங்கிகளும், அவற்றை விஞ்சி வணிக வங்கிகளும் பட்டியலிடுவது வழக்கம். ஆனால், இவற்றில் பெரும்பாலான கடன்கள் நகை அடமானக் கடன்களே தவிர, அடமானம் இல்லாத பயிர்க் கடன் இல்லை என்பதுதான் உண்மை.

பட்டா, சிட்டா உள்ளிட்டவை இல்லாமல் பெறப்படும் நகை அடமானக் கடன்களை, விவசாயக் கடனாக கூட்டுறவு மற்றும் வணிக வங்கிகள் கணக்குக் காட்டுவதைத் தடுக்க உரிய தணிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத வரை, அரசு நிர்ணயிக்கும் பயிர்க் கடன்கள் முழு அளவில் விவசாயிகளைச் சென்றடையாது என்றனர் விவசாயிகள்.

காவிரி நீர் கிடைக்காத நிலையில், பருவமழையின் உதவியுடன் சம்பா சாகுபடிப் பணிகளை மேற்கொண்டு வரும் விவசாயிகளுக்கு, உரிய வகையில் பயிர்க் கடன் கிடைப்பதற்கான நடைமுறைகளையாவது விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே விவசாயிகளின் எதிர்பார்ப்பு.

**தொட்டல்லா அணைக்கட்டு திட்டத்தை தொடங்க விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்**

First Published : 04 Oct 2010 02:38:26 PM IST

கிருஷ்ணகிரி, அக்.3: கிடப்பில் போடப்பட்டுள்ள தொட்டல்லா அணைத் திட்டத்தை தொடங்க மாநில அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் அஞ்செட்டியில் சனிக்கிழமை நடைபெற்ற கொடியேற்று விழா மற்றும் பொதுக்கூட்டத்தில் இச்சங்கத்தின் மாநிலத் தலைவர் மருத்துவர் எம்.ஆர்.சிவசாமி பேசியது:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பாயும் ஆறுகளின் குறுக்கே ஒரு கிலோமீட்டர் தூரத்துக்கு தடுப்பணைகள் கட்ட வேண்டும். அஞ்செட்டி பகுதிகளில் அதிக அளவில் விவசாயிகள் ஆயில் மோட்டார்களை பயன்படுத்துகின்றனர் என்றார் சிவசாமி.

**இடி விழுந்து கருகியது தென்னை மரம்**

First Published : 04 Oct 2010 11:15:21 AM IST

தம்மம்பட்டி, அக். 3: தம்மம்பட்டி பகுதியில் இடி விழுந்து தென்னை மரம், பம்புசெட் மோட்டார்,டிவி ஆகியவை கருகின.

தம்மம்பட்டி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதியில் சனிக்கிழமை பலத்த மழை, இடி மின்னலுடன் பெய்தது.

அப்போது கோனேரிப்பட்டி காட்டுக் கொட்டாய் பகுதியில் உள்ள விவசாயி ஜெஸ்டின் என்பவரது தோட்டத்தில் இடி விழுந்தது. இதில் தென்னை மரம், கிணற்றின் பம்புசெட் மோட்டார் ஆகியவை கருகின. மேலும் கிணற்றிலிருந்து சிறிது தூரத்திலுள்ள ஜெஸ்டின் வீட்டிலிருந்த டி.வி. சிடி பிளேயர் ஆகியவை கருகின.

**விவசாயிகளுக்கு | 613 லட்சம் மானிய உதவி**

First Published : 04 Oct 2010 11:36:53 AM IST

உதகை, அக். 3: நீலகிரி மாவட்டத்தில் தேசிய தோட்டக் கலை இயக்கத் திட்டத்தின் கீழ் | 613 லட்சம் மதிப்பிலான நலத்திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

இது தொடர்பாக நீலகிரி மாவட்ட தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் தேவராஜன் தெரிவித்துள்ளதாவது:

இயற்கையான காற்றோட்டம் கொண்ட உயர் ரக பசுமைக் குடில்கள் 50,000 ச.மீ. பரப்பளவில் விவசாயிகளின் தோட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன. இத்திட்டத்தில் விவசாயிகள் அமைக்கும் பசுமைக் குடில்கள் முழுதும் உயர் ரக இரும்புக் குழாய்களை கொண்டு அமைக்கப்பட்டிருக்க வேண்டும். ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 1000 ச.மீ.பரப்பிற்கு 50 சதம் மானியம் வழங்கப்படவுள்ளது.

மலர் சாகுபடியாளர்களின் நலனைக் கருதி இவ்வாண்டு புதிதாக கொய்மலர் நடவு பசுமைக் குடில்கள் மேற்கொள்ள விவசாயிகளுக்கு மொத்தம் 1.10 லட்சம் ச.மீ. பரப்பளவிற்கு 50 சத மானியம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சாகுபடியாளரும் 500 ச.மீ. பரப்பிற்கான கொய்மலர் நடவுச்செடிகள் பெற 50 சத மானியத்தில் அதிகபட்சமாக 1 ச.மீருக்கு | 250 வீதம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இயற்கை வழி வேளாண்மையை ஊக்குவிக்கும் பொருட்டு விவசாயிகளுக்கு மொத்தம் 800 ஹெக்டேர் பரப்பளவில் ஒரு ஹெக்டேருக்கு | 4,000 வீதம் இடுபொருட்கள் வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு விவசாயியும் 4 ஹெக்டேர் பரப்பளவிற்கு பயனடையலாம்.

இயற்கை வழி வேளாண்மையில் முக்கிய பங்கான இயற்கை விவசாயத்திற்கு அபிடா எனப்படும் விவசாய பொருட்கள் ஏற்றுமதி விரிவாக்க நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற இயற்கை சான்றளிப்பு நிறுவனங்களிடமிருந்து பெரும் வகையில் விவசாயிகள் குழுக்களுக்கு மொத்தம் 50 ஹெக்டேர் பரப்பளவு இயற்கை விவசாயம் மேற்கொள்ளும் தருணத்தில் முதலாமாண்டு நிதியுதவியாக | 1.5 லட்சம் வழங்கப்படும். இது போன்று இவ்வாண்டு 16 விவசாயிகள் குழுக்களுக்கு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

நிரந்தர மண்புழு உரக்களம் விவசாயிகளின் தோட்டங்களில் அமைக்க ஒவ்வொரு உரக்களத்திற்கும் 50 சதம் மானியமாக | 30,000 வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தில் விவசாயிகள் ஒவ்வொரு உரக்களத்தையும் 30 அடி நீளம், 8 அடி அகலம் மற்றும் இரண்டரை அடி உயரம் கொண்ட கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தாற்காலிக மண்புழு உரக்களம் உயர் அடர்வு கொண்ட பாலித்தீன் கொண்டு தயாரிக்கப்பட்ட தாள்களைக் கொண்டு 12 அடி நீளத்திலும், 4 அடி அகலத்திலும் அமைக்க 50 சதம் மானியமாக | 5,000 வீதம் 5 களங்கள் விவசாயிகளின் தோட்டங்களில் இவ்வாண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தோட்டக்கலைத் துறையில் இயந்திரமாக்கும் திட்டத்தின்கீழ் விசை கொண்டு இயங்கும் இயந்திரங்கள், வேளாண்மைக் கருவிகள், விசை ரம்பம் மற்றும் உயர் தொழிற்நுட்ப விசைத்

தெளிப்பான்கள் ஆகியவற்றை விவசாயிகள் பெற 50 சதம் மானியமாக அதிகபட்சமாக | 17,500 விவசாயிகளுக்காக நடைமுறைப்படுத்தப்படும்.

மனிதவளத்தை மேம்படுத்தும் விதமாக நீலகிரி மாவட்டத்தில் 500 விவசாயிகளுக்கு 5 நாள் பயிற்சி நடத்தப்படவுள்ளது. தமிழகத்திற்குள் பயணம் மேற்கொள்ள 100 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு அழைத்து செல்லப்படவுள்ளனர். மேலும் வெளி மாநிலங்களுக்கு 20 விவசாயிகள் அழைத்து செல்லப்படவுள்ளனர்.

கிராமப்புற சந்தைகள், மண்டிகள், நேரடி சந்தை ஆகியவை ஏற்படுத்தும் வகையில் 40 சத மானியத்தில் ஒரு சந்தை அமைக்க திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின்கீழ் அதிகபட்சமாக | 20 லட்சம் நிதியில் வங்கி கடனுடன் அமைக்கப்படவுள்ள மேற்கண்டவற்றிற்கு 40 சதம் மானியமாக | 8 லட்சம் பின்னேற்பு மானியம் வழங்கப்படும்.

இத்திட்டங்களில் பயன்பெற நீலகிரி மாவட்டத்திலுள்ள விவசாயிகள் தங்கள் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் மற்றும் அவரவர் பகுதி உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் தோட்டக்கலை அலுவலர்களை அணுகி பயனடையலாமென, தோட்டக்கலை இணை இயக்குநர் தேவராஜன் தெரிவித்துள்ளார்.

**பஞ்சு விலை உயர்வு எதிரொலி: ஆடைகளின் விலை 15% உயர்வு**

First Published : 05 Oct 2010 12:00:00 AM IST



மும்பை, அக்.4: இந்த ஆண்டு தீபாவளி பட்ஜெட்டில் ஒவ்வொரு குடும்பமும் ஆடைகளுக்கு என அதிக தொகை ஒதுக்க வேண்டியிருக்கும். கடந்த ஆண்டைக் காட்டிலும் ஆடைகளின் விலை 15 சதவீதம் உயர்ந்துள்ளதே இதற்கு முக்கியக் காரணமாகும்.

÷பிரபல நிறுவனத் தயாரிப்புகள் மட்டுமின்றி அனைத்து ரக துணிகளின் விலையும் அதாவது கைக் குட்டை முதல் வேஷ்டி, துண்டு, லுங்கி உள்ளிட்ட அனைத்து ரக ஆடைகளின் விலையும் கணிசமாக உயர்ந்துள்ளது. ஆயத்த ஆடைகளின் விலையும் இதேபோல 15 சதவீதம் முதல் 20 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளதாக பிரபல நிறுவனத் தயாரிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

÷இந்த ஆண்டு 356 கிலோ எடை கொண்ட ஒரு பேல் பஞ்சு விலை ரூ.40 ஆயிரமாக உயர்ந்துள்ளது. இது கடந்த ஆண்டு ரூ.22 ஆயிரமாக இருந்தது.

÷லெவிஸ், பெப்பே, ஸ்பைகர், ராங்ளர், கலர் பிளஸ் முப்டி, கில்லர், ஏரோ மற்றும் பார்க் அவின்யூ உள்ளிட்ட பிரபல நிறுவனத் தயாரிப்புகளின் விலை கணிசமாக உயர்ந்துள்ளது. இதேபோல துணிகளின் விலை மீட்டருக்கு

ரூ.15 உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் டெனிம் துணி மீட்டர் விலை இப்போது ரூ.130-க்கு விற்கப்படுகிறது. ஆயத்த ஆடைகளின் விலை 5 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது.

÷டெனிம் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள பிற நிறுவனங்களான சிரிபால், ஆர்வீ ஆகியன தங்கள் தயாரிப்பு விலையை மீட்டருக்கு 10 சதவீதம் உயர்த்தியுள்ளன. கனெக்ஷன்ஸ் ஜீன்ஸ் முன்னர் ரூ.1,599-க்கு விற்கப்பட்டது. இந்த பண்டிகைக்கு இதே ரக துணிக்கு நீங்கள் ரூ.1,899 கொடுக்க வேண்டியிருக்கும்.

÷ஏற்கெனவே ரிலையன்ஸ், மதுரா, அரவிந்த் நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளின் விலையை 5 சதவீதம் முதல் 7 சதவீதம் வரை உயர்த்தியுள்ளன.

÷ஆமதாபாதைச் சேர்ந்த நிறுவனம் தங்களது தயாரிப்புகளின் விலையை 7 சதவீதம் முதல் 10 சதவீதம் வரை உயர்த்தியுள்ளதாக நிறுவனத் தலைவர் சுஷீல் கெப்ல் தெரிவித்துள்ளார். இருப்பினும் இந்த விலையேற்றத்தால் நஷ்டம் ஓரளவு குறையுமே தவிர, லாபம் கிடைக்காது. எனவே அடுத்த 3 மாதங்களுக்குள் 50 சதவீத அளவுக்கு உயர்த்தினால் மட்டுமே தொழிலை தொடர்ந்து நடத்த முடியும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

÷ஆர்வீ நிறுவனம் டெனிம் துணியின் விலையை 15 சதம் வரை கடந்த ஆண்டு உயர்த்தியது. இப்போது மேலும் 7 சதவீதம் வரை உயர்த்தியுள்ளதாக நிறுவனத்தின் தலைவர் ஆஷிஷ் ஷா தெரிவித்தார்.

தினமலர்

**சிறு விவசாயி கூட ஏற்றுமதியில் ஈடுபடலாம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 05,2010,02:00 IST

சேலம்: ""ஏற்றுமதி என்றாலே அதற்கு ஏராளமான திறன்கள் வேண்டும், பெரிய நிறுவனங்களால் மட்டுமே அது முடியும் என்பது போன்ற எண்ணம் பரவலாக காணப்படுகிறது. உண்மையில் சிறிய விவசாயி கூட ஏற்றுமதியில் ஈடுபட முடியும். இந்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும்,'' என, மதுரை குளோபல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஃபாரின்

டிரேடு இயக்குனர் ராஜமூர்த்தி பேசினார்.சேலம் பெரியார் பல்கலை மேலாண்மைக்கல்வி நிறுவனத்தில் ஏற்றுமதி ஊக்குவிப்பு மையம் துவக்கவிழா நேற்று நடந்தது. மேலாண்மைத்துறை தலைவர் ராஜேந்திரன் வரவேற்றார்.

பெரியார் பல்கலை துணைவேந்தர் முத்துச்செழியன் மையத்தை துவக்கி வைத்து பேசியதாவது: உலக அளவிலான பொருளாதாரத்தில் இந்தியா 133 வது இடத்திலும், வியாபாரம் துவக்குவதில் 169வது இடத்திலும், கட்டுமான பணிகளில் 175வது இடத்திலும் என பல துறைகளிலும் ரேங்க் பட்டியலில் பின்னுக்கு தள்ளப்பட்டுள்ளது. இதற்கு ஏற்றுமதி துறையில் போதிய வளர்ச்சியடையாமல் இருப்பதும் காரணம்.தற்போதைய சூழ்நிலையில் அனைத்து துறைகளுக்கும், தொழில்களுக்கும் இன்டர்நெட் மற்றும் ஐ.டி., துறை அடிப்படையாக மாறிவருகிறது. குறிப்பாக ஏற்றுமதி, இறக்குமதி தொழில்களில் இன்டர்நெட் மிக அவசியமாகிறது. மார்க்கெட் மதிப்பு தெரிந்து கொள்ள, தகவல்களை பரிமாறிக்கொள்ள, வேகமான சேவை என பல்வேறு விதங்களில் உதவி வருகிறது.நம் நாட்டின் தொழில் ஏற்றுமதியில் மிக முக்கிய பங்கு வகிக்கும் சிறு, குறு தொழிற்சாலைகளிலும் நவீன தகவல் தொடர்பு முறை குறித்த தொழில்நுட்பங்களை பயன்படுத்த தொடங்கியுள்ளனர். இவை இன்னும் அதிகரிக்க வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.

மதுரை, "குளோபல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஃபாரின் டிரேடு' இயக்குனர் ராஜமூர்த்தி பேசியதாவது:மாணவர்களிடையே தொழில் முனைவோராக ஆவதற்கான குறிக்கோள்கள் கொண்டவர்கள் மிகவும் அரிது. இன்று இந்தியாவில் உள்ள 70 சதவிகித, "பிஸினெஸ்மேன்'கள் ஒரு விபத்தாகவே தொழில் முனைவோராக மாறியுள்ளனர்.
எந்த ஒரு தொழிலை தொடங்க வேண்டும் என்றாலும், அதில் பயம் வருகிறது. முதல் போட்டு, தொழில் தொடங்கி லாபம் சம்பாதிப்பதை விட பன்னாட்டு நிறுவனத்தில் நல்ல சம்பளத்தில் வேலைக்கு சேருவது பாதுகாப்பானது என்ற எண்ணம் இன்று இளைய தலைமுறையினரிடையே அதிகம் காணப்படுகிறது.உண்மையில் நம்நாட்டு வளர்ச்சிக்கு ஏராளமான தொழில் முனைவோர்கள் தேவைப்படுகின்றனர். 110 கோடி மக்கள் தொகை எண்ணிக்கை உள்ள நமது நாட்டில் 2.35 லட்சம் பேர் மட்டுமே ஏற்றுமதிக்கான ஐ.இ.சி., கோடு நெம்பர் பெற்றுள்ளனர்.

இதிலும் ஒரு லட்சம் பேர் மட்டுமே அதை தொடர்ந்து பயன்படுத்துகின்றனர்.ஏற்றுமதி என்றாலே அதற்கு ஏராளமான திறன்கள் வேண்டும், பெரிய நிறுவனங்களால் மட்டுமே அது முடியும் என்பது போன்ற எண்ணம் பரவலாக காணப்படுகிறது. உண்மையில் சிறிய விவசாயி கூட ஏற்றுமதியில் ஈடுபட முடியும். இந்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும், என்றார்.

**வனத்துறையின் கருவேல மரம் ஏலம் அரசுக்கு ரூ.1.23 கோடி வருமானம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 05,2010,01:41 IST

சேலம்: சேலத்தில் வனத்துறை சார்பில் நடந்த கருவேல மர ஏலத்தின் மூலம், அரசுக்கு 1.23 கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது.தமிழ்நாடு முழுவதும் இடைபடுகாடுகள் கோட்டத்தின் சார்பில் ஆண்டுதோறும் கிராமநல மரத் தோட்டங்களில் உள்ள கருவேல் மற்றும் சீமை கருவேல் மரங்களை வெட்டி அப்புறப்படுத்துவதற்காக ஏலம் விடப்படுகிறது. ஏலத்தின் மூலம் தமிழக அரசுக்கு கணிசமான தொகை வருமானமாக கிடைக்கிறது.

நடப்பு ஆண்டிற்கான சேலம் இடைபடுகாடுகள் கோட்டத்தில் உள்ள கிராம நல தோட்டங்களில் நன்கு வளர்ந்துள்ள, கருவேல் மற்றும் சீமை கருவேல் மரங்களுக்கான ஏலம், குமாரசாமிப்பட்டி இடைபடுகாடுகள் அலுவலக வளாகத்தில் நடந்தது. சேலம், ஆத்தூர், ஓமலூர், கொடைக்கானல், ஊட்டி, திண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 50க்கும் மேற்பட்ட மர வியாபாரிகளும், குத்தகைதாரர்களும் கலந்து கொண்டனர்.ஏல பார்வையாளராக தலைமை வன பாதுகாவலர் சேகர் கலந்து கொண்டார். சேலம் மாவட்ட வனபாதுகாவலர் (பொறுப்பு) வரதராஜுலு தலைமையில், கோட்ட வன அலுவலர் தன்ராஜ் முன்னிலையில் ஏலம் நடந்தது. ஆத்தூர், சங்ககிரி, ஏத்தாப்பூர் ஆகிய சரகங்களில் உள்ள ஏரிதோட்டங்களில் வளர்ந்துள்ள கருவேல மரங்கள் ஏலம் விடப்பட்டது.

இது குறித்து சேலம் மாவட்ட வனபாதுகாவலர் (பொறுப்பு) வரதராஜுலு கூறுகையில், ""சேலம் மாவட்டத்தில் ஆத்தூர், சங்ககிரி, ஏத்தாப்பூர் ஆகிய சரகங்களில் 19 ஏரி தோட்டங்களில் வளர்ந்துள்ள கருவேல மரங்களுக்கான ஏலத்தில் 18 ஏரி தோட்ட மரங்கள் ஏலம் விடப்பட்டுள்ளது. அரசு நிர்ணயித்த தொகையை விட 6.75 சதவீதம் அதிகப்படியான தொகைக்கு ஏலம் விடப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசுக்கு 1.23 கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது,'' என்றார்.

**உயிர் உரம் விநியோகத்தில் பள்ளிபாளையம் சாதனை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 05,2010,00:32 IST

பள்ளிபாளையம்: "நடப்பு ஆண்டில் 10 ஆயிரம் பாக்கெட் உயிர் உரங்கள் கூடுதலாக வினியோகம் செய்து பள்ளிபாளையம் வேளாண் விரிவாக்க மையம் சாதனை படைத்துள்ளது' என, வேளாண் உதவி இயக்குனர் முரளிதரன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:பள்ளிபாளையம் வட்டாரத்தில் நெல், கரும்பு, நிலக்கடலை, எள், மஞ்சள் ஆகிய பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. ரசாயன உரங்களை மட்டுமே பயன்படுத்தி வருவதால், மண் தன்மை மாறி மகசூல் குறைய வாய்ப்பு உள்ளது.மண் வளம் குறைவதால், இயற்கை வேளாண்மையில் விவசாயிகள் நாட்டம் கொண்டுள்ளனர். மண் வளத்தை பராமரித்து மகசூலை அதிகரிக்கும் வகையில் பயிருக்கு உயிர் உரங்களை வேளாண் துறை வினியோகம் செய்து வருகிறது.

உயிர் உரமிடுவதால் மண் தன்மை பாதிப்பதில்லை. மண் வளம் கூடுகிறது. வேர்களின் அருகில் சத்து கிடைக்கச் செய்கிறது. அசோஸ்பைரில்லம் என்ற உயிர் உரம் தழைச்சத்தையும், பாஸ்டோபேக்டீரியா என்ற உயிர் உரம் மணிச்சத்தையும் பயிர்களுக்கு கிடைக்கச் செய்வதால் மகசூல் அதிகரிக்கிறது.உயிர் உரங்களின் விலையும் குறைவுதான். அதை விதை நேர்த்தி செய்யலாம். நாற்றங்காலுக்கும், நடவு வயலுக்கும் மக்கிய குப்பையை எருவுடன் கலந்து இடலாம். கடந்த ஆண்டு உயிர் உரங்களின் வினியோகம் 12 ஆயிரத்து 800 எண்கள் மட்டுமே.

நடப்பு ஆண்டில் இதுவரை 22 ஆயிரத்து 800 பாக்கெட்டுகள் வினியோகம் செய்து, கடந்த ஆண்டைவிட கூடுதலாக 10 ஆயிரம் பாக்கெட்டுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.மேலும், 10 ஆயிரம் பாக்கெட்டுகள் தருவிக்கப்பட உள்ளது. உயிர் உரங்களை பயன்படுத்தி மண் வளம் காத்து, அதிக மகசூல் பெற விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். உயிர் உரங்கள் தேவைப்படுவோர் பள்ளிபாளையம் வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி பதிவு செய்து கொள்ளலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**விதை நேர்த்தி செய்தால் நெல் விளைச்சல் அமோகம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 05,2010,00:27 IST

மோகனூர்: "சம்பா பருவத்தில் நாற்று விடும் முன், நெல் விதைகளை விதை நேர்த்தி செய்தால் அதிக விளைச்சல் பெறலாம்' என, மோகனூர் வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:மோகனூர் வட்டாரத்தில் பரவலாக மழை பெய்து வருவதால், சம்பா பருவத்துக்கான நாற்றுவிடும் பணி துவங்கியுள்ளது. நாற்று விடுவதற்கு முன் விதையுடன் 200 கிராம் (ஒரு பொட்டலம்) அசோஸ்பைரில்லம் மற்றும் ஒரு பொட்டலம் பாஸ்டோபாக்டீரியா உயிர் உரத்தை விதையுடன் நன்கு கலந்து விதை நேர்த்தி செய்து  விதைக்க வேண்டும்.அசோஸ்பைரில்லம் காற்றில் இருக்கும் தழைச்சத்தை கிரகித்து பயிருக்கு கொடுக்கிறது. பாஸ்டோபாக்டீரியா மண்ணில் கிட்டாத நிலையில் உள்ள மணிச்சத்தை கரைத்து நெல் பயிருக்கு தருகிறது.அதனால், உரச்செலவு குறைவதுடன் அதிக விளைச்சலும் கிடைக்கும். உயிர் உரங்கள் மோகனூர் விரிவாக்க மையத்தில் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**ஆனைமலை கொப்பரை ஏல மையத்திற்கு வரத்து குறைவு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 04,2010,23:20 IST

ஆனைமலை:மழை பெய்து வருவதால், ஆனைமலை ஒழுங்கு முறை விற்பனை கூடத்திற்கு கொப்பரை வரத்து குறைந்து, விலை ஏறியுள்ளது.ஆனைமலை ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் நேற்று நடந்த கொப்பரை ஏலத்தில், ஆனைமலை சுற்றுப்பகுதி விவசாயிகள் 20 பேர் 34 மூட்டை கொப்பரையை கொண்டு வந்தனர். கொப்பரையை நான்கு வியாபாரிகள் ஏலம் எடுத்தனர். விற்பனைக்கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) சந்திரசேகர் ஏலம் நடத்தினார்.

முதல் தர கொப்பரை 21 மூட்டைகள் ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 40.10 ரூபாய் முதல் அதிகபட்சமாக 43.65 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 13 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 31 ரூபாய் முதல் அதிகபட்சமாக 31.80 ரூபாய் வரை விலை கிடைத்தது.வழக்கமாக ஆனைமலை கொப்பரை ஏல மையத்திற்கு 100 மூட்டைகள் வரை கொப்பரை வரத்து காணப்படும். கடந்த சில நாட்களாக மழை பெய்து வருவதால் கொப்பரை வரத்து குறைந்து, நேற்று 34 மூட்டைகள் மட்டுமே

வரத்திருந்தது.கொப்பரை வரத்து குறைந்துள்ளதால், கொப்பரை விலை உயர்ந்துள்ளது. கடந்த வாரத்தை காட்டிலும் இந்த வாரம் முதல் தர கொப்பரை கிலோவுக்கு 1.40 ரூபாய் வரையும், இரண்டாம் தர கொப்பரைக்கு 1.70 ரூபாயும் உயர்ந்தது.

**பட்டுக்கூடு விலை சரியாமல் இருக்க முன்னேற்பாடு:பட்டு வளர்ச்சித்துறையினர் தகவல்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 05,2010,00:09 IST

உடுமலை:"தசரா பண்டிகையையொட்டி, பட்டுக்கூடுகள் விலை சரியாமல் இருக்க தேவையான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது' என பட்டு வளர்ச்சி துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.உடுமலை, பொள்ளாச்சி, பொங்கலூர் மற்றும் சுற்றுப்பகுதிகளில் 3 ஆயிரத்திற்கும் அதிகமான ஏக்கரில் மல்பெரி பயிரிடப்பட்டு, நாள்தோறும் ஒரு டன் வரை வெண்பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கர்நாடகா மாநிலத்தில் பட்டுக்கூடு ரீலிங் தொழில் அதிகளவு மேற்கொள்ளப்படுவதால், அம்மாநில ராம்நகர் மையத்தில் பட்டுக்கூடுகளுக்கு நல்ல விலைகிடைக்கிறது.

உடுமலை பகுதியில் உற்பத்தியாகும் பட்டுக்கூடுகள் முழுவதும் கர்நாடகா மாநிலத்திற்கு விற்பனைக்காக கொண்டு செல்லப்பட்டு வந்தது. இதனால், உற்பத்தியாளர்கள் பல்வேறு பிரச்னைகளை சந்தித்து வந்தனர். இந்நிலையில், பட்டு வளர்ச்சி துறை சார்பில் உள்ளூர் மையங்களான பென்னாகரம், கோவை, தர்மபுரி மையங்களிலும் கூடுகளுக்கு நல்ல விலை கிடைக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கர்நாடகா மாநிலத்தில் பட்டுக்கூடு உற்பத்தி பாதிப்பு, சீன இறக்குமதியில் பிரச்னை காரணமாக பட்டுக்கூடுகளின் விலை பல மடங்கு உயர்ந்து கடந்த சில மாதங்களாக கிலோவுக்கு 350 ரூபாய் வரை விலை கிடைத்து வருகிறது. ஆண்டுதோறும் கர்நாடகா மாநிலத்தில் சிறப்பாக கொண்டாடப்படும் தசரா பண்டிகையையொட்டி பட்டுக்கூடுகளுக்கு விலைசரியும். அப்பகுதி ரீலர்கள் பண்டிகைக்காக உற்பத்தியை நிறுத்துவதால் தமிழகத்தில் கொண்டு செல்லப்படும் கூடுகள் விற்காமல் தேங்கும்.

விரைவில், தசரா பண்டிகை வர உள்ள நிலையில், பட்டுக்கூடுகளுக்கு விலை சரியும் என உற்பத்தியாளர்கள் கவலையடைந்திருந்தனர். ஆனால், விலையில் எந்த மாற்றமும் இல்லாமல் தொடர்கிறது. இது குறித்து பட்டு வளர்ச்சி துறை அதிகாரிகள் கூறுகையில், பட்டுக்கூடுஉற்பத்தியாளர்கள் விற்பனைக்காக வெளிமாநிலங்களுக்கு செல்வது குறைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ஆட்டோமெட்டிக் ரீலிங் யுனிட், ரீலிங் பேசின்கள் இயங்க துவங்கியிருப்பதால் கூடுகளுக்கு தேவை அதிகமுள்ளது.

மேலும், தீபாவளி பண்டிகை சீசன் காரணமாக கூடுகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. கூடுகள் தேவைப்படும் ரீலர்கள் பென்னாகரம், கோவை உட்பட மையங்களை அணுக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. உடுமலை பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குநர் அலுவலகத்திலும் ரீலர்கள் கூடுகளை நேரடியாக வந்து கொள்முதல் செய்கின்றனர். எனவே இந்தாண்டு தசரா சீசனில் பட்டுக்கூடுகள் விலை சரியாமல் உள்ளது. தரமான கூடுகளுக்கு கிலோ 350 ரூபாய் வரை தற்போதும் விலை கிடைக்கிறது என்றனர்.

**ஈரப்பதம் உயர்த்தி நெல் கொள்முதலுக்கு கோரிக்கை : எஃப்.சி.ஐ.,க்கு முன்மொழிவு செய்ததாக கலெக்டர் தகவல்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 05,2010,02:00 IST

தஞ்சாவூர்: "ஈரப்பதம் உயர்த்தி கொள்முதல் செய்ய வேண்டும்,' என தஞ்சை கலெக்டரிடம் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்தனர்.

தஞ்சை கலெக்டர் அலுவலகத்தில் நேற்று காலை மக்கள் குறைதீர் கூட்டம் நடந்தது. அப்போது, ஒரத்தநாடு பகுதியில் இருந்து நெல் மூடைகளுடன் வந்த தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் கக்கரை சுகுமாறன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சாமிநடராஜன் மற்றும் விவசாயிகள் கலெக்டர் சண்முகத்திடம் கூறியதாவது:

போர்வெல் மூலம் சாகுபடி செய்யப்பட்ட குறுவை அறுவடை நடந்து வருகிறது. அதற்குள் ஒரத்தநாடு தாலுகாவில் உள்ள நுகர்பொருள் வாணிபக்கழகத்துக்கு சொந்தமான கொள்முதல் நிலையங்களில் அக்டோபர் ஒன்று முதல் நெல் கொள்முதல் 17 சதவீத ஈரப்பதத்துடன் மட்டும் நடக்கும் என்று கூறி நெல் கொள்முதலை நிறுத்திக் கொண்டனர்.
தற்போது, டெல்டா மாவட்டத்தில் அனைத்து இடங்களிலும் மழை பெய்து வருகிறது. ஒரத்தநாட்டில் அதிக அளவாக மழை பெய்கிறது. குறுவை பருவத்தில் அறுவை செய்யப்படும் நெல் உலர வைத்து, தூற்றி, தூய்மையாக எடுத்து வர எட்டு முதல் 10 நாட்கள் வரை ஆகிறது. அப்படி இருந்தும் ஈரப்பதம் உட்பட பல காரணங்கள் கூறி நெல் கொள்முதல் செய்வதை மறுக்கின்றனர்.
இதனால் ஒரத்தநாடு தாலுகாவில் உள் ஒரத்தநாடு, கக்கரை, மண்டலக்கோட்டை, திருமங்கலக்கோட்டை, பஞ்சநதிக்கோட்டை, மடிகை உட்பட 24 நெல் கொள்முதல் நிலையங்களிலும் தலா இரண்டாயிரம் மூடை நெல் கொள்முதல் செய்யப்படாமல் உள்ளது. இந்த நெல் கொள்முதலுக்காக விவசாயிகள் காத்துக்கிடக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, இந்திய உணவுக்கழகம் மற்றும் மாநில அரசிடம் பேசி உடனடியாக அனைத்து நெல்லையும் கொள்முதல் செய்ய வேண்டும். ஈரப்பதம் 20 முதல் 21 சதவீதம் வரை ஏற்க வேண்டும். இதற்கு நடவடிக்கை எடுக்காமல் போனால், விவசாயிகள் அறுவடை செய்த நெல், மழையால் வீணாகிறது. அல்லது, இதை பயன்படுத்தி தனியார் வியாபாரிகள் மிகக்குறைந்த விலைக்கு நெல்லை கொள்முதல் செய்து செல்லும் சூழல் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.
கோரிக்கையை கேட்ட கலெக்டர் சண்முகம் கூறியதாவது: செப்டம்பர் 30ம் தேதியுடன் கடந்த காரிப் பருவம் (கொள்முதல் பருவம்) முடிந்துவிட்டது. அக்டோபர் ஒன்று முதல் மீண்டும் கொள்முதல் பருவத்தை இந்திய உணவுக்கழகம் (எஃப்.சி.ஐ) அறிவித்து, எவ்வளவு ஈரப்பதத்தில் கொள்முதல் செய்ய வேண்டும் என அறிவிப்பர். முன்னதாக அவர்கள் ஒரு குழுவை அனுப்பி இங்குள்ள மழை மற்றும் கொள்முதல் நிலையை அறிந்து செல்வர்.

அவர்கள் கூறும் விதிப்படி நுகர்பொருள் வாணிபக்கழகம் மூலம், முகவராக விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்யப்படும். அக்டோபரில் மீண்டும் கொள்முதல் துவங்க முன்மொழிவு அரசுக்கும், இந்திய உணவுக்கழகத்துக்கும் அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் ஆணை வந்துவிடும். மழைக்காலமாக இருப்பதால் ஈரப்பதத்தையும் உயர்த்தி கொள்முதல் செய்ய கேட்டுள்ளோம். விரைவில் அதற்கும் ஆணை வெளியிடப்படும். குறுவை பருவத்தில் 20 ஆயிரம் ஹெக்டேர்தான் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நெல் வீணாகாமல் காக்க நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

**கண்வலிக்கிழங்கிற்கு ஒட்டன்சத்திரத்தில்நேரடி கொள்முதல் மையம் அமையுமா**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 05,2010,01:29 IST

ஒட்டன்சத்திரம்: மருத்துவ பயிரான கண்வலிக்கிழங்கிற்கு ஒட்டன்சத்திரம் பகுதியில் கொள்முதல் நிலையத்தை அரசு தொடங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.ஒட்டன்சத்திரம், கள்ளிமந்தையம், தொப்பம்பட்டி, வேடசந்தூர், குஜிலியம்பாறை, வடமதுரை ஆகிய பகுதிகளில் கண்வலிக்கிழங்கு பயிரிடப்படுகிறது.
கலப்பைக்கிழங்கு என்ற செங்காந்தாள்மலர், குளோ ரி லில்லி, சூப்பர் லில்லி, லில்லிமலர், கார்த்திகைக்கிழங்கு ஆகியவை கண்வலிக்கிழங்கின் வேறு பெயர்களாகும்.கண்வலிக்கிழங்கு பல நோய்களை குணப்படுத்தும் மருத்துவ குணம் கொண்டது. குடற்புழுக்களைக் கட்டுப்படுத்தவும், பாம்பு மற்றும் தேள் கடிக்கு மருந்தாகவும், வயிற்றுப்புண், மூலம், வீக்கம், தோல் வியாதி, தொழுநோய், ஆஸ்துமா மற்றும் பால்வினை நோய்களை குணப்படுத்தவும்,பிரசவ வலியை தூண்டும் மருந்தாகவும் பயன்படுகிறது. இதன் கிழங்கு மற்றும் விதைகளில் உள்ள "கோல்ச்சின்'

மற்றும் "சூப்பர்பின்' என்ற மூல வேதிப்பொருள் மூட்டுவலி, பக்கவாத நோய்களை குணப்படுத்தவும் பயன்படுகிறது.

இதன் இலைகளை அரைத்து நெற்றியிலும், கழுத்திலும் பற்றுவைத்துக் கட்டுவதின் மூலம் சிறுவர்களுக்கு ஆஸ்துமா நோய் கட்டுப்படுத்தப்படுகிறது. மேலும் இலைச் சாற்றினைத் தலையில் தேய்த்து குளிப்பதன் மூலம் பேன், பொடுகு போன்றவற்றிலிருந்தும் நிவாரணம் பெறலாம்.கிழங்குகள் நட்ட 55 நாட்களில் பூக்க ஆரம்பிக்கும். 105 முதல் 110 நாட்களில் காய்கள் உண்டாகி 160 முதல் 180 நாட்களில் முற்றிய காய்கள் அறுவடைக்கு தயாராகிறது. நடவு செய்த 3 வருடங்களுக்கு பின் ஒரு எக்டரில் குறைந்த பட்சம் ஆயிரம் கிலோ உலர்ந்த விதைகளை பெறலாம். ஒரு முறை சாகுபடி செய்த இப்பயிரினை நன்கு பராமரித்து வந்தால் 5 ஆண்டு காலம் வரை நல்ல மகசூல் பெறலாம்.

ஒட்டன்சத்திரம் பெருமாள்கவுண்டன் வலசைச் சேர்ந்த விவசாயி வேலுச்சாமி கூறியாவது:கடந்த வருடம் ஒரு கிலோ விதை ஆயிரம் ரூபாய்க்கு விற்றது. ஆனால் அதே விதை வெளிநாடுகளில் ஆறாயிரம் ரூபாய் வரை விற்கப்பட்டது. இடைத்தரகர்களால் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைப்பதில்லை.இப்பகுதியில் கண்வலிக்கிழங்கு நேரிடை கொள்முதல் நிலையத்தை அரசு தொடங்கினால் தங்களுக்கு உரிய விலை கிடைக்கும் என்று கண்வலிக்கிழங்கு பயிரிட்டுள்ள விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**மானாவாரி நிலங்களில், விதைப்பு பணி துவக்கம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 05,2010,01:25 IST

தேனி:தேனி மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையால் மானாவாரி நிலங்களில் விதைப்பு பணிகள் தொடங்கி உள்ளன. தேனி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை மிகவும் தாமதமாக கடந்த வாரம் முதல் பெய்து வருகிறது.மாவட்டத்தின் எல்லா பகுதிகளிலும் நல்ல மழை பெய்துள்ளது. காலையில் வெயில் அடித்தாலும் மாலையில் தினமும் ஏதாவது ஒரு பகுதியில் சாரல் மற்றும் மழை பெய்து வருகிறது. இந்த மழை தொடரும் வாய்ப்புகளும் உள்ளதால் விவசாயிகள் நிலங்களை உழுது விதைப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். கம்பு, சோளம், பயறு வகைகள் விதைக்கப்படுகின்றன.அக்டோபர் கடைசி வாரத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கி

விடும். எனவே தற்போது விதைக்கப்படும் பயிர்கள் நல்ல முறையில் விளைச்சலுக்கு வந்து விடும். நடப்பு ஆண்டில் 52 ஆயிரம் ஹெக்டேரில் மானாவாரி சாகுபடி நடக்கும் வாய்ப்புகள் உள்ளது.

**விவசாயிகளுக்கு பழ மரங்கள் சாகுபடி பயிற்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 05,2010,00:05 IST

தூத்துக்குடி: கன்னியாகுமரி அரசு பழத்தோட்டத்தில் ஓட்டப்பிடாரம் தோட்டக்கலை துறை சார்பில் தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளுக்கு பழ மரக்கன்றுகள் சாகுபடி குறித்த மாநில அளவிலான பயிற்சி நடந்தது.கன்னியாகுமரி அரசு பழத்தோட்டத்தில் வேள ாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை சார்பில் இப்பயிற்சி நடத்தப்பட்டது. பயிற்சியில் தூத்துக்குடி மாவட்டத்தைச் சார் ந்த ஓட்டப்பிடாரம், புதியம்புத்தூர், கொல்லன்கிணறு, வெங்கடாசலபுரம் மற்றும் பல்வேறு கிராம விவசாயிகள் கலந்து கொண்டனர். ஓட்டப்பிடாரம் தோட்டக்கலை உதவி இயக்குனர் கனகராஜ் வரவேற்றார்.

தோட்டக்கலை அலுவலர் குமரேசன் மா சாகுபடி குறித்த நவீன தொழில்நுட்ப செய்திகளை கூறினார். உதவி வேள ாண்மை அலுவலர்கள் செல்வராஜ், மாரிமுத்து கொய்யா, சப்போட்டா மற்றும் எலுமிச்சை சாகுபடி மற்றும் உர நிர்வாகம் செய்தல் பற்றி பேசினார். முன்னோடி விவசாயிகள் வேல்ராஜ், ஐய்யலுசாமி, ராமசாமி ஆகியோர் பழமரக்கன்றுகளுக்கு சொட்டு நீர் பாசனம் அமைத்து நீர் பாய்ச்சப்படும் போது 50 சத தண்ணீர் சேதாரம் தவிர்க்கப்படுகிறது எனவும், கூடுதலாக 50 சத பரப்பினை நீர்ப்பாய்ச்சலுக்கு கொண்டு வரலாம் எனவும், சொட்டு நீர் பாசனம் கொண்டு நீர் பாய்ச்சப்படும் போது 10 முதல் 20 சதம் மகசூல் அதிகரிப்பதாகவும் தெரிவித்தனர்.பின்னர் கனகராஜ் பழமரக்கன்றுகளுக்கு சொட்டு நீர் பாசனம் அø மக்க அரசு 65 சத மானியம் வழங்குகிறது எனவும், இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஒரு விவசாயி அதிகபட்சம் 5 ஹெக்டேர் வரை மானியத்தில் சொட்டு நீர் பாசனம் அமைக்கலாம் என தெரிவித்தார். முன்னோடி விவசாயி ஐய்யலுசாமி நன்றி கூறினார்.

**காய்கறி சாகுபடியாளர்கள் கூட்டம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 04,2010,21:14 IST

பண்ருட்டி : பண்ருட்டி அடுத்த கட்டமுத்துப்பாளையம் கிராமத்தில் இருந்து உழவர் சந்தைக்கான காய்கறி வரத்து அதிகரிக்கும் நோக்கில் காய்கறி சாகுபடியாளர்கள் கூட்டம் ஊராட்சி வளாகத்தில் நடந்தது.

ஊராட்சி தலைவர் குமார் தலைமை தாங்கினார். கடலூர் வேளாண்மை அலுவலர் சுரேஷ் உழவர் சந்தைக் கான நோக்கங்கள், உழவர் சந்தையினால் விவசாயிகளுக்கு நேரடியாக கிடைக்கும் நன்மைகள் குறித்து பேசினார்.

உதவி வேளாண்மை அலுவலர் பாஸ்கர் பேசுகையில், "உழவர் சந்தையில் காய்கறி, பழங்கள், மலர்கள் போன்ற விளைபொருட்கள், மலை காய் கறி வரத்து அதிகப்படுத்த மகளிர் சுய உதவிக் குழுக் கள் அமைத்து விற்பனை மேற்கொள்ளவும், அடை யாள அட்டை இல்லாதவர்களுக்கு அட்டைகள் வழங்கப்படும்' என கூறினார். கூட்ட ஏற்பாடுகளை துணை வேளாண்மை அலுவலர் வரதராஜன், உதவி வேளாண்மை அலுவலர்கள் உதய பாஸ்கர், கொளஞ்சி ரவிக்குமார், நந்தகோபால் ஆகியோர் செய்திருந்தனர். கூட்டத் தில் 40க்கும் மேற்பட்ட காய்கறி சாகுபடியாளர்கள் பங்கேற்றனர்.

**விவசாயிகள் சிரமத்தை போக்க வட்டியில்லா கடன் : அய்யப்பன் எம்.எல்.ஏ., பெருமிதம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 04,2010,21:11 IST

கடலூர் : விவசாயிகள் வட்டிக்கு வாங்கி சிரமப்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக அரசு விவசாயிகளுக்கு வட்டியில்லா கடன் வழங்குகிறது என எம்.எல்.ஏ., அய்யப்பன் பேசினார்.

கடலூர் அடுத்த காரணப்பட்டு ஊராட்சியில் பொது சுகாதாரத்துறை, நோய்த் தடுப்பு மருத்துவத்துறை மற்றும் தூக்கணாம்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையம் சார்பில் வருமுன் காப்போம் மருத்துவ முகாம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் நடந்தது. ஊராட்சி தலைவர் கிருஷ்ணமூர்த்தி தலைமை தாங்கினார். வட்டார மருத் துவ அலுவலர் ரூபாவதி முன்னிலை வகித்தார். கடலூர் ஒன் றிய கல்விக்குழு தலைவர் ஜெயபால், ராமலிங்கம், ஜெயபதி ராமமூத்த்தி முன்னிலை வகித்தனர். வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சீனுவாசன், பத்மநாபன், மருத்துவ அலுவலர் அழகுராஜ் மற்றும் கடலூர் அரசு பொதுமருத்துவமனை டாக்டர்கள் பங்கேற் றனர்.

நிகழ்ச்சியில் மருத்துவ முகாம், அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் 5 லட் சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட நூலகம், எம்.எல்.ஏ., தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 3 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட நாடக மேடை அரங்கு ஆகியவற்றை திறந்து வைத்து அய்யப் பன் எம்.எல்.ஏ., பேசியதாவது : முதல்வர் கருணாநிதி, தமிழ் நாட்டை தன்னிறைவு பெற்ற மாநிலமாக உயர்த்த வேண்டும் என்ற நோக்கில் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

இந்த அரசு விவசாயிகளுக்கு சிறப்பான முறையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நெல் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டுள்ளது. இலவச மின்சாரம், மின் மோட்டார், விவசாயிகளின் சிரமத்தை போக்கவே வட்டியில்லா கடனை அரசு வழங்கி வருகிறது' என பேசினார்.

கூட்டத்தில் லோக ரட்சகன், சத்யா, சுபாஷினி ஆகிய மாற்றுத் திறனாளிகளுக்கு தலா 2,000, காரணப்பட்டு கிராம இளைஞர்களுக்கு விளையாட்டு பொருட்கள் வாங் குவற்கு 5,000 ரூபாயும் வழங்கினார்.

**மானாவாரியில் பயிரிட்ட பருத்தி சீரான மழையால் செழித்துள்ளது**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 04,2010,22:12 IST

தியாகதுருகம் : தியாகதுருகம் பகுதியில் மானாவாரியில் சாகுபடி செய்துள்ள பருத்தி செடிகள் சீராக பெய்துவரும் மழையால் செழித்து வளர்ந்துள்ளது. தற்போது பூக்கும் பருவத்தில் உள்ள பருத்தி செடிகளுக்கு மேல்உரம் இட விவசாயிகளுக்கு வேளாண்மை அலுவலர் பரிந்துரை செய்துள்ளார்.

தியாகதுருகம் பகுதியில் 3,000 ஏக்கர் பரப்பில் விவசாயிகள் மானாவாரியில் பருத்தி சாகுபடி செய்துள்ளனர். வறட்சியை தாக்குப்பிடித்து வளரும் தன்மை கொண்ட வீரிய ரகங்களான ஆர்.சி.எச்-2, 20, மல்லிகா ஆகிய பருத்தி விதைகளை சாகுபடி செய்துள்ளனர். கடந்த ஆகஸ்டு மாதம் பெய்த மழை ஈரத்தை பயன்படுத்தி நிலத்தை உழுது விதைத்தனர். அவ்வப்போது சீராக மழை பெய்ததால் செடிகள் நன்கு செழித்து வளர்ந்து தற் போது பூக்கும் பருவத்தில் உள்ளன.

கடந்த இரு ஆண்டுகளாக காய்முதிர்ந்து பஞ்சு வெளிப்படும் போது தொடர் மழை பெய்து மகசூலை பாதித்தது. இதனால் மானாவாரியில் பருத்தி சாகுபடி செய்த பெரும்பாலான விவசாயிகளுக்கு எதிர்பார்த்த லாபம் கிடைக் கவில்லை. இவ்வாண்டு சீரான மழை தொடரும் பட்சத்தில் தற்போது செழித்து வளர்ந்துள்ள பருத்தி செடிகளால் எதிர் பார்த்த மகசூலை விவசாயிகள் பெறவாய்ப்புள்ளது. மகசூலை பெருக்கிட ஊட்டச்சத்து உரங்கள் பருத்தி மகசூலை பெருக்க ஊட்டச்சத்து உரங்களை இட வேண்டும்.

இது குறித்து தியாகதுருகம் வேளாண்மை அலுவலர் ராமச்சந்திரன் கூறியதாவது: பூக்கும் பருவத்தில் உள்ள செடிகளுக்கு ஊட்டச்சத்து உரங்களை இடவேண்டும். இதனால் பூ உதிர்ந்து போகாமல் அதில் காய்கள் உருவாகி நன்கு பருத்து வளர்ந்து மகசூல் அதிகரிக்கும். இதற்காக

அரை மூட்டை காம்ப்ளக்ஸ் உரம், ஒரு மூட்டை வேப்பம் புண்ணாக்கு, ஒரு கிலோ போராக்ஸ் ஆகியவற்றை ஒன்றாக கலந்து வேர் பகுதியில் படாமல் செடிகளின் இடைவெளியில் தூவவேண்டும். இதனால் செடிகளுக்கு தேவை யான ஊட்டச்சத்துக்கள் கிடைக்கும். வேப்பம் புண்ணாக்கில் உள்ள கசப்பு தன்மை வேர் கரையான்கள் செடிகளை தாக்குவதை தடுக்கும். இதனால் முழுமையான மகசூலை விவசாயிகள் பெறமுடியும். இவ்வாறு வேளாண்மை அலுவலர் ராமச் சந்திரன் கூறினார்.

**கொள்முதல் நிலையம் அமைக்க விவசாயிகள் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 04,2010,21:58 IST

சங்கராபுரம் : மரவள்ளி கிழங்கு கொள் முதல் நிலையம் அமைக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சங்கராபுரம் மற்றும் அதனை சுற்றியுள்ள அரசம்பட்டு, புதுபாலப் பட்டு, லக்கினாய்கன் பட்டி, புளியங்கோட்டை, மூலக்காடு, பொய்குனம், நெடுமானூர், ஆலத்தூர், அழகாபுரம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் மரவள்ளி கிழங்கினை விவசாயிகள் அதிகளவில் பயிர் செய்து வருகின்றனர்.

இதில் முள்வாடி, ரோஸ், குங்குமரோஸ் ஆகிய ரகங்கள் அதிகளவில் பயிர் செய்யப்படுகிறது. தற் போது சங்கராபுரம் பகுதியில் மரவள்ளி கிழங்கு பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு விளைச்சல் அமோகமாக உள்ளது.

மர வள்ளி கிழங்கு மூலம் மாவு, ஜவ்வரிசி, சத்து மாவு தயாரிக்கப்படுகிறது. கடந்தாண்டு ஒரு ஏக்கருக்கு 300 மூட்டை வரை மர வள்ளி கிழங்கு அறுவடை செய்தோம். இந்தாண்டு 200 மூட்டை தான் கிடைக்கிறது. ஒரு டன் 2,500 ருபாய்க்கு கொள் முதல் செய்கின்றனர். அறுவடை செய்யப்பட்ட மர வள்ளி கிழங்குகளை லாரி கள் மூலம் தலைவாசல், ஆத்தூர் சென்று விற்பனை செய்வதால் போக்குவ ரத்து செலவு, வீண் அலைச் சல் ஏற்படுகிறது. மர வள்ளி கிழங்கு களை விவசாயிகள் உட னுக்குடன் விற்பனை செய்ய சங்கராபுரத்தில் கொள்முதல் நிலையம் திறக்க வேண்டும். இது குறித்து சங்கராபு ரம் பகுதி விவசாயிகள் தமி ழக அரசுக்கு கோரிக்கை மனு அனுப்பி உள்ளனர்.

நடப்பு 2010–11 பருவத்தில் இந்தியாவில், பருத்தி உற்பத்தி 19 சதவீதம் அதிகரிக்க வாய்ப்பு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு 2010–11 பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) இந்தியாவில், பருத்தி உற்பத்தி 19 சதவீதம் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இம்மாதம் தொடங்கிய புதிய பருவத்தில் நம் நாட்டில் 3.50 கோடி பொதி பருத்தி உற்பத்தியாகும் என்றும், சென்ற செப்டம்பர் மாதத்துடன் நிறைவடைந்த பருவத்தில் உற்பத்தி 2.95 கோடி பொதிகளாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு பொதி என்பது 170 கிலோ பருத்தியைக் கொண்டதாகும்.

பருத்தி சாகுபடி

நடப்பு பருவத்தில் இந்தியாவில், பருத்தி சாகுபடி பரப்பளவு 10 சதவீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு ஆண்டு ஜூன் மாதம் முதல் தற்போது வரை பயிரிடும் பரப்பளவு 50 சதவீதத்துக்கு மேல் உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 2009–ஆம் ஆண்டு கோடை கால விதைப்பு பருவம் வரையில் 1.01 கோடி ஹெக்டேரில் பருத்தி சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. பருத்தி உற்பத்தியில் உலக அளவில் நம் நாடு 2–வது இடத்தில் உள்ளது.

*உலக அளவில் பருத்தி ஏற்றுமதியில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. நடப்பு பருவத்தில் (ஆகஸ்டு–ஜூலை) அந்நாட்டில் 1.85 கோடி பொதி பருத்தி உற்பத்தியாகி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, முந்தைய பருவத்தைக் காட்டிலும் 52 சதவீதம் அதிகமாகும்.*

*தென் மாநிலங்கள்*

*நாடு முழுவதுமாக பருத்தி சாகுபடி பரப்பளவு அதிகரித்து வரும் நிலையில், தமிழ்நாட்டில் பருத்தி பயிரிடும் பரப்பளவு சரிவடைந்து வருவதாக தெரிகிறது. நாட்டின் மொத்த பருத்தி உற்பத்தியில் தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் ஆந்திரா ஆகிய தென் மாநிலங்களின் பங்களிப்பு, ஒட்டுமொத்த அளவில் 7 சதவீதமாக உள்ளது. பருத்தி ஆலோசனை வாரியம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தின்படி, 2008–09–ஆம் ஆண்டு பருவத்தில், தமிழ்நாட்டில் 1.09 லட்சம் ஹெக்டேர் நிலத்தில் பருத்தி சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. இது, 2009–10 பருவத்தில் 1.04 லட்சம் ஹெக்டேராக சரிவடைந்தது. 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில் 95,000 ஹெக்டேர் பரப்பளவில்தான் பருத்தி சாகுபடி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*வேலைவாய்ப்பு*

*இந்திய ஜவுளி, பருத்தி துறைகள் அதிக அளவில் வேலைவாய்ப்புகளை வழங்குகின்றன. பருத்தி சாகுபடி, வர்த்தகம் மற்றும் பதப்படுத்துதல் ஆகிய அனைத்துப் பிரிவுகளிலுமாக இத்துறை சுமார் 5 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது. பருத்தியை மூலப்பொருளாகக் கொண்டு பல்வேறு தயாரிப்புகளை அளிப்பதில் உலக அளவில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.*

*இந்திய ஜவுளித் துறையில் பருத்தி உற்பத்தி துறையின் பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பருத்தி உற்பத்தி, பயன்பாடு, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி போன்ற அனைத்து பிரிவுகளிலும் ஏற்படும் ஏற்ற, இறக்கங்கள் நேரடியாக ஜவுளி துறையை பாதிக்கிறது.*

## தேயிலை வாரியத்தின் சலுகைகள் பெற சிறு விவசாய சங்கங்கள் அமைக்கும் வழிமுறைகள் அறிவிப்பு

*குன்னூர், அக்.5–*

*குன்னூர் தேயிலை வாரியம் மற்றும் உபாசி வேளாண்மை அறிவியல் நிலையம் ஆகியவை இணைந்து தேயிலை வாரியத்தின் சலுகைகள் பெற சிறு விவசாயிகள்*

சங்கங்கள் அமைக்க வழி முறைகளை அறிவித்து உள்ளது.

5 ஆண்டு கால திட்டம்

தேயிலை வாரியம் மற்றும் உபாசி வேளாண்மை அறிவியல் நிலையம் ஆகியவை இணைந்து சிறு தேயிலை விவசாயிகள் கூட்டம் அமைப்பதற்கான வழிமுறை கள் குறித்த செய்தி குறிப்பை வெளியிட்டுள்ளன. அதில் கூறப்பட்டு உள்ளதாவது:– தேயிலை வாரியமும், உபாசி வேளாண்மை அறிவியல் மையமும் இணைந்து மத்திய அரசின் பதினோராவது 5 ஆண்டு திட்டத்தின் கீழ் புதிய சுய உதவிக்குழுக்களை அமைக் கவும் தற்போது செயல்பாட்டில் உள்ள சுய உதவிக்குழுக்களை மேம்படுத்தவும், புதிய சலுகை களை அறிவித்து உள்ளன.

50 சிறு விவசாயிகள்

சுய உதவிக்குழுக்கள் மற்றும் சிறு தேயிலை விவசாய சங்கங்கள் அமைக்க கீழ்க்கண்ட விதிமுறைகள் உள்ளன.

ஒவ்வொரு குழுவிலும் குறைந்தபட்சம் 50 சிறு விவசாயிகளோ அல்லது குறு விவசாயிகளோ அங்கத்தினர் களாக இருக்க வேண்டும். குழுவில் உள்ள உறுப்பினர் களின் ஒட்டு மொத்த தேயிலை சாகுபடி பரப்பு 50 ஏக்கருக்கு குறையாமல் இருக்க வேண்டும்.

குழுவின் ஒவ்வொரு உறுப் பினரும் நில உரிமை சான்று, தேயிலை வாரிய பதிவு சான்று, கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளின் உறுப்பினர் சான்று, நிலவரி ரசீது, கிராம நிர்வாக அலுவலரால் வழங் கப்படும் அனுபோக சான்றிதழ் இவற்றில் ஏதாவது ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும்.

வங்கி கணக்கு

ஒவ்வொரு குழுவும் தமிழக அரசின் கூட்டுறவு சங்க விதிப் படி அந்தந்த மாவட்ட தலை மையகத்தில் செயல்படும் சங்கத்திலும் பின் தேயிலை வாரியத்திலும் அதன் பெயரை உறுப்பினராக பதிவு செய்ய வேண்டும். குழுவின் பெயரில் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கி ஒன்றில் கணக்கு தொடங்க வேண்டும்.

குழுவின் செயற்குழு உறுப் பினர் பட்டியலில் தேயிலை வாரியத்தின் செயல் இயக்கு னரால் நியமிக்கப்படும் அலுவலர் ஒருவர் உறுப்பின ராக இடம் பெற்று இருக்க வேண்டும். மேற்கண்ட விதி முறைகளை கொண்டு ஆரம் பிக்கப்பட்ட சுய உதவிக்குழு அல்லது தேயிலை சிறு விவசாயிகள் சங்கங்களுக்கு தேயிலை வாரியத்தின் மூலம் சலுகைகள் வழங்கப்படும்.

பிளாஸ்டிக் கூடை

இலை பை ஒவ்வொன்றும் 30 ரூபாய் விலையில் வழங்கப் படும். பிளாஸ்டிக் இலை

கூடைகளுக்கு 210 ரூபாய் மானியமாக வழங்கப்படும். ஒவ்வொரு பச்சை தேயிலை கொள்முதல் மையத்திற்கும், அதிகபட்சமாக 30 ஆயிரம் ரூபாய் பரிந்துரை செய்யப் படும்.

பச்சை தேயிலை கொள் முதல் மையம் ஒவ்வொன்றிற் கும் 2 தராசுகளும் ஒவ்வொரு தராசிற்கு 3 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படும். பச்சை தேயிலை எடுத்து செல்ல வாகனம் வாங்கும் செலவில் பாதி தொகையினை தேயிலை வாரியம் ஏற்று கொள்ளும். ஒவ்வொரு 25 ஏக்கருக்கும் ஒரு கவாத்து எந்திரம் வாங்க 35 ஆயிரம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படும். உரக்கிடங்கு அமைக்க அதிகபட்சமாக 50 ஆயிரம் ரூபாய் பரிந்துரை செய்யப்படும். சிறு தேயிலை தொழிற்சாலை அமைப்பதற்கு மொத்த செலவில் 40 சதவீதம் (அதிகபட்சமாக 25 லட்சம்) மானியமாக வழங்கப்படும்.

இது மட்டுமின்றி ஒவ்வொரு குழுவின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் 2 உறுப் பினர்களுக்கு உபாசி வேளாண்மை அறிவியல் மையத்தில் தேயிலை சாகுபடி குறித்த அனைத்து பயிற்சிகளும் தேயிலை வாரியத்தின் செலவில் வழங்கப்படும்.

பயிற்சிக்கு பின் தலா ரூ.500 வீதம் 6 மாத காலத்திற்கு பயிற்சியாளர்களுக்கு ஊக்கத் தொகை அளிக்கப்படும். இப் பயிற்சியாளர்கள் தோட்ட மேலாளர்களை போல செயல் பட்டு அந்தந்த குழுவினர் முறையான சாகுபடிக்கும் தர மேம்பாட்டிற்கும் உதவிகரமாக இருக்க வேண்டும்.

மேற்கண்டவாறு அந்த செய்தி குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.